செய்தி வெளியீடு எண்: 09 நாள்: 04.10.2021

**தேனி மாவட்டம்**
**மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில்**
**மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில்**
**7 பயனாளிகளுக்கு ரூ.2.03 இலட்சம் மதிப்பிலான அரசின் நலத்திட்ட உதவிகள்**
**மற்றும் 6 பயனாளிகளுக்கு மாதாந்திர உதவித்தொகை பெறுவதற்கான ஆணைகளை**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளீதரன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்:-**

தமிழக அரசின் உத்தரவின்படி, மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், கொரோனா தொடர்பான அரசின் வழிக்காட்டு நெறிமுறைகளை பின்பற்றி, தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (04.10.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளீதரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, ஆதரவற்ற விவசாயக்கூலி உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் அடையாள அட்டை, பட்டாகோருதல், பட்டா மாறுதல், கல்விக்கடன் கோருதல், இலவச தையல் இயந்திரம் கோருதல், காவல்துறை தொடர்பான மனுக்கள், முன்னாள் படைவீரர்கள் மற்றும் வாரிசுதாரர்கள் மற்றும் மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் என பல்வேறு கோரிக்கை மனுக்களை பொதுமக்கள் வழங்கினார்கள்.

இன்றைய தினம் இக்கூட்டத்தின் மூலம் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 475 மனுக்களில், தகுதி வாய்ந்த மனுக்கள் மீது எந்தவித காலதாமதமுமின்றி உரிய விசாரணை மேற்கொண்டு, அதற்குரிய பலன்களை உடனடியாக அளித்திடவும், மனுக்களின் நிலை குறித்து 15 நாட்களுக்குள் மனுதாரர்களுக்கு பதிலளித்திடவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் மூலம் பெறப்பட்ட மனுக்களின் நிலை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவின் மூலம் பெறப்பட்ட மனுக்களின் நிலை ஆகியன தொடர்பாகவும், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மின்கல(பாட்டரி)த்தினால் இயங்க கூடிய சக்கர நாற்காலி வழங்கும் திட்டத்தின் கீழ் 1 பயனாளிக்கு ரூ.1,00,000/- மதிப்பிலான சக்கர நாற்காலியினையும், நவீன செயற்கை கால் வழங்கும் திட்டத்தின் கீழ் 1 பயனாளிக்கு ரூ.69,000/- மதிப்பிலான செயற்கை காலினையும், மூன்று சக்கர வண்டி வழங்கும் திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு தலா ரூ.7,650/- வீதம் ரூ.15,300/- மதிப்பிலான வண்டிகளையும், சக்கர நாற்காலிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 3 பயனாளிகளுக்கு தலா ரூ.6,450/- வீதம் ரூ.19,350/- மதிப்பிலான நாற்காலிகளையும் என மொத்தம் 7 பயனாளிகளுக்கு ரூ.2,03,650/- மதிப்பிலான அரசின் நலத்திட்ட உதவிகளையும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் மாதாந்திர உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 6 பயனாளிகளுக்கு மாதாந்திர உதவித்தொகை பெறுவதற்கான ஆணைகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் க.ரமேஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மரு. ஆர்.தண்டபாணி, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) என்.சாந்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொ) விமலாராணி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் க.சகுந்தலா, அனைத்துத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**